# பாரதிதாசனுக்குக் கடிதங்கள்

# கடிதம் - 2.1

1937

''வாத்தியார் சுப்புரத்தினம் அவர்கட்கு வ.ரா. வணக்கம்.

சில நாட்களுக்கு முன் திரு. குருசாமி என்னை நாராயணசாமியுடன் கண்டார். உங்கள் கவிகள் பிரசுரமாவதைக் குறித்து, மிகவும் மகிழ்ச்சி கொண்டேன். என் கையால் குறிப்பு வேண்டுமென்றார்கள். தருகிறேன் என்றேன். பிறகு அவர்கள் வரவில்லை. நிற்க.

நான் ராமானுஜன் படம் எடுப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்! அதற்கு நீங்கள் பாட்டு எழுதிக் கொடுப்பீர்கள் என்று அன்பின் உரிமையைக் கொண்டு பத்திரிகையில் விளம்பரம் செய்துவிட்டேன். ஆகையால் பிரசுரத்தையும் பாடல்களையும் முன்னிட்டு நீங்கள் சென்னையில் ஒரு வாரம் தங்கினால் போதும்.

என்னைப் பாக்கியசாலியாகக் கருதிக்கொள்வேன். தமிழ்நாடும் உங்களை வாழ்த்தும். இந்தக் கடிதம் கொண்டு வரும் தியாகராஜசிவம் என்று பெயர். அருமையான தேசபக்தர், சுப்பிரமணியசிவா அவர்களின் சீடன்.

உங்களைச் சென்னைக்குக் கையோடு அழைத்து வரும்படியாக அவரை அனுப்பியிருக்கிறேன். தயவு செய்து சிரமத்தைப் பாராமல் வரவேணும்.

நான் நேரில் வந்து அழைத்துக் கொண்டு வரவேண்டிய நிர்பந்தத்தை அடியேனுக்கு வைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

உங்கள் அன்பன்

**வ.ரா**

பாடல்களுக்குப் பைநிறையப் பணம் உண்டு. வ.ரா.

• *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப. 229-230.*

# கடிதம் - 2.2

குருசாமி
தமிழ்நூல் நிலையம்

சென்னை
20.02.39

பேரன்புடைய அத்தான் (பாரதிதாசன்) அவர்கட்கு வணக்கம்.

நலம். தங்கள் 19.2.39 கடிதம் கிடைத்தது. இரணியன் 1 வாரத்திற்குள் வரும். தாங்கள் சொன்ன படம் போடுவதற்கு இப்போது முடியாது என்பதைத் தெரிவிக்க வருந்துகிறேன்.

காரணம் : புத்தகம் அச்சாவது வெளியில் தெரிந்துவிட்டது. வெளிவந்த 10 தினங்களுக்குள் விற்பனையாகாவிட்டால் சுமார் 150 ரூபாய் வரையில் நஷ்டம். இப்புத்தகம் மாத்திரம்தான் இந்த நிலையில் விற்பனையாக வேண்டியிருக்கும். தங்களுக்கு அதே தினத்தில் 50 புத்தகங்கள் அனுப்ப உத்தேசம். விலை 0-6-0. நல்ல காகிதம்; நல்ல ராப்பர்; 4 புத்தகங்கள் தாங்களுக்கு வைத்துக்கொள்ளுங்கள். மற்றவைகளை 2-3 தினங்களில் விற்று (நமது D. சிவப்பிரகாசம் முதலிய நண்பர்கள் மூலம்) உடனே ரூபாயாக்குங்கள். ஆக்கிய உடன் நமக்குத் தெரிவியுங்கள். பணத்தை மட்டும் இங்கு அனுப்ப வேண்டாம். சுடச்சுட வேலை நடக்க வேண்டும். பிற விவரங்கள் பின்னால். நிற்க.

ஈ.வெ.ரா. - வரலாறு - செய்யுள் - வெகு - வெகு - வெகு - சீக்கிரம் வரவேண்டும். "ஆறினகஞ்சி பழங்கஞ்சி". அதாவது ஒரு வாரத்திற்குள் எனக்குக் கிடைக்க வேண்டும். இரவில் தூங்க வேண்டாம்.

வணக்கம். சேமம் முதலிய விசயங்களை எழுத நேரமில்லை. நிலையத்திற்கு ஒரு வாரத்திற்குள் 4, 5 புத்தகங்கள் வரவேண்டும்.

அன்பன்
**குருசாமி**

• *குருவிக்கரம்பை வேலு கொடுத்துதவிய கடிதத்தின் படி.*

# கடிதம் - 2.3

27.1.1942

சுப்புரத்தினம் அவர்கட்கு,

இன்று காலை 9.20 மணிக்கு நம் அதிகாரி உங்கள் பள்ளிக்கு வந்தார்.

உங்கள் வகுப்பு மாணவர்களை அப்போதுதான் நீங்கள் வகுப்பறைக்கு அழைத்துச் சென்றீர்களாம். காலை 9.00 மணிக்கு விடுகின்ற விளையாட்டு நேரம் 5 நிமிடங்களுக்கானது.

அதிகப்படியாக 15 நிமிடங்கழித்து வகுப்பறைக்குச் செல்ல வைத்த உங்களுடைய ஒழுங்கு தவறிய செயலுக்கு உரிய காரணம் என்ன என்பதை உடனே எனக்குத் தெரிவிக்கவும்.

இப்படிக்கு
**பி. ஜொஸ்லேன்**
தலைவர், கல்வித்துறை, புதுச்சேரி

(புதுவையில் பள்ளிக்கூடங்களும் அரசினர் அலுவலகங்களும் காலை 8.00 மணிக்கே வேலை செய்யத் தொடங்கும். வியாழன், ஞாயிறு ஆகிய நாட்களில் பள்ளி விடுமுறை. ஞாயிறு அலுவலக விடுமுறை நாள்)...

"என் மனைவி உடல் நலமின்றிப் படுத்த படுக்கையாக இருக்கிறாள். இதற்கெனச் சம்பளமில்லாத விடுமுறையும் கேட்டேன். விடுமுறை அளிக்க மறுத்துவிட்டீர்கள். என் மனம் அமைதியிழந்தது. இப்படிப்பட்ட தவறு இழைத்துவிட்டேன்". என்று கல்வித் தலைவருக்குக் கடிதம் எழுதிவிட்டார்.

கல்வித்துறைத் தலைவர் இனி இவ்வாறு நடக்கலாகாது என எச்சரித்து 31.1.1942-ல் கடிதம் எழுதிவிட்டார்.

- *பாரதிதாசன் குயில், இலக்கியத் திங்கள் இதழ்*, 10.8.1967, *குயில்* 1; *இசை* 4, *ப*. 13-14.
- *ஆண்டு விவரம் குறிப்பிடப்படவில்லை.*

# கடிதம் - 2.4

திருவாரூர்
16.11.42

உயர்திரு.

கவிப் பெரியார் அவர்களுக்கு, தமிழன்பன் மு. கருணாநிதி வணக்கம் பல:

நிற்க, தமிழின் தற்போதைய தீ நிலையை நீக்கி ஆக்கந்தேடும் பொருட்டுத் தமிழ் மாணவர்கள் ஒன்று கூடி, ''தமிழ்நாடு தமிழ்மாணவர் மன்றம்'' நிறுவியுள்ளோம். தலைமை மன்றம் சேலம். கிளைகள் ஆங்காங்கு பல உள. திருவாரூரிலும் கிளை ஒன்று நிறுவத் துணிந்துள்ளோம்.

திறப்புவிழாவிற்குத் தங்கள் வாழ்த்துச் செய்தியையும் வருகையையும் எதிர்பார்க்கிறோம்.

இங்ஙனம்
தங்களன்புள்ள
**மு. கருணாநிதி**. வணக்கம்

தமிழ் மாணவர் மன்றத்தின் வாயிலாகத் தங்களது கவி ஒன்று வெளியிடத் தீர்மானித்துள்ளோம். தயவு செய்து எங்களை அலட்சியம் செய்யாமல் ஒன்று அனுப்பவும்.

மிக மிக வணக்கம்.

- *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப. 353.*

# கடிதம் - 2.5

14.2.43

"தங்கள் கடிதங்கள் குடியானவன் புரூப்ஸ் கிடைத்தன.

சக்தியின் கொள்கை காந்திக் கொள்கையாகையால் 'குடியானவன்' பாட்டை வெளியிடவில்லை. இம்மாத இதழுக்கு வேறு அனுப்புங்கள். நாலைந்து நாளில் கிடைத்தால் நல்லது".

- *திரு. சக்தி வை. கோவிந்தன் அவர்கள் பாரதிதாசனுக்கு எழுதியது.*
- *பாரதிதாசன் குயில், இலக்கியத் திங்கள் இதழ், 10.7.1967, குரல் 1; இசை 3, ப. 60.*

# கடிதம் - 2.6

11.9.1943

தாங்கள் பாரதியாரைப் பற்றி அனுப்பிய கட்டுரை கிடைத்தது. இம்மாதத்தில் மிகவும் பொருத்தமானது. கட்டுரைப் பொருளும் ரசமாயிருக்கிறது. என் மனப்பூர்வமான வந்தனம். ‘சக்தி’க்குத் தாங்கள் அடிக்கடி, கட்டுரைகளோ, கவிதைகளோ எழுதிக்கொண்டிருக்க வேண்டுகிறேன்.

பொன் வைக்குமிடத்தில் பூ வைப்பது போல, தங்களுக்கு ஏதேனும் பிரதிப் பிரயோசனம் செய்ய, எங்கள் விருப்பம்.

உங்கள் கட்டுரை, கவிகளின் உரிமை உங்களிடம் இருக்கும்.

‘சக்தி’யைத் தங்கள் பத்திரிகையாகப் பாவியுங்கள்.

தங்கள் அன்பன்

**தி.ஜ. ரங்கநாதன்**

- *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப. 338.*

# கடிதம் - 2.7

போடிநாயக்கனூர்
2.10.43

அன்புமிக்க, உயர்திரு. பாரதிதாசன் அவர்கட்குச் செல்லப்பரெட்டி எழுதியது,

வணக்கம். தங்களின் 19.10.43 கடிதம் கிடைத்தது. விபரம் உணர்ந்தேன். தங்கள் கடிதத்தின்படி சென்னையிலேயே அரங்கு நடைபெறுவது மிக்க பயனுடையதாய் இருக்குமென்று நாங்களும் கருதுகிறோம். யுத்த நெருக்கடியைப் பொறுத்துதான் சிறிது கஷ்டம் இருக்கும். ஆனால், கால நிலைமையைக் கவனித்து ஆவன செய்து கொள்ளலாம். கடிதத்தைத் தோழர் கிருஷ்ணராஜுவுக்கும் மற்ற தோழர்கட்கும் அறிவித்தேன். அவர்களும் இசைந்துள்ளார்கள். நானும் தோழர் கிருஷ்ணராஜுவும் 27 அல்லது 28 தங்கள் திட்டத்தின்படி புதுவை வருகிறோம். மற்றவை நேரில்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
**எம். செல்லப்ப ரெட்டி**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.52.*

# கடிதம் - 2.8

18.10.43

முருகு. சுப்பிரமணியன்
கோனாபட்டு
புதுக்கோட்டைத் தனியரசு

பேரன்புடையீர்,

..........................................

..........................................

"தமிழ் வாழ்க" புத்தகத்திற்குச் சிறப்புப்பாயிரம் தர வேண்டுகிறேன். அச்சாபீஸில் புத்தகங்கள் இருக்கின்றன. நாட்கள் கடந்துவிட்டன. தயவு செய்து விரைந்து அனுப்ப வேண்டுகிறேன்.

அன்புள்ள
**முருகு. சுப்பிரமணியன்**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.51.*

# கடிதம் - 2.9

21.11.43

முருகு
கோனாபட்டு
புதுக்கோட்டைத் தனியரசு

ஐயா அவர்களுக்கு,

நலம். கார்டு வந்தது. முத்தமிழ் அரங்கு முதல் தொகுப்பு வந்தது. நண்பர்களும் நானும் பார்த்தோம். தமிழச்சியின் கத்தியையும் படித்தேன். மிக நன்றாக இருக்கிறது. அதைத்தான் நம் முதல் நூலாக வெளியிட வேண்டும்.

"கொய்யாக் கனிகள்" சென்னைக்கு வரும்போது கொண்டு வரவேண்டியது.

நானும் இன்னும் ஒரு தோழரும் (பழநியப்ப செட்டியார் இசையாவிட்டால் வேறொருவர்) சென்னைக்கு வியாழக்கிழமை (25.11.43) காலையில் (சென்னை) சேருவோம். தமிழச்சியின் கத்தியையும் அரங்குத் தொகுப்பையும் வரும்போது கொண்டு வருவோம்.

பிற நேரில்

அன்புள்ள,

**முருகு சுப்பிரமணியன்.**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.53.*

# கடிதம் - 2.10

நாமக்கல்
17.12.43

அன்புமிக்க ஐயா அவர்கட்கு வணக்கம். நலம். நலம் காண மகிழ்ச்சி. தாங்கள் முதலில் கடிதம் எழுதுவதாக இருந்ததால் என் கடிதம் தாமதப்பட்டது. திரு. மு. சுப்பிரமணியம் அவர்கள் கடிதம் இன்று கிடைத்தது. குமாரி. மாசிலாமணி என்ற நடிகை விரைவில் வருவதாக வரைந்துள்ளார். மற்றபடி பயிற்சி செவ்வனே நடைபெறும் விபரமும் கடிதத்தில் கண்டிருக்கிறது. நான் இன்னும் 1 வாரத்துக்குள் பணம் அனுப்பிவிட்டுப் புறப்படுகிறேன். வரும்போது தேன் கொண்டு வருகிறேன். தோழர், பெருமாள் ரூபாய் 100 கொடுத்துள்ளார். இன்னும் தொகை சீக்கிரத்தில் கொடுப்பதாக வாக்களித்துள்ளார். தோழர்கள். கிருஷ்ணராஜ் அவர்களும் கருப்பண்ணன் அவர்களும் நலமே. அன்புமிக்க கோபதிக்கு என் வாழ்த்து. மற்றபடி தங்கள் கடிதம் கண்டு பதில் எழுதுகிறேன்.

இங்ஙனம்,
தங்களன்புள்ள
**எம். செல்லப்ப ரெட்டி.**

* *[பாரதிதாசன் மகன் மன்னர் மன்னனின் இயற்பெயர் கோபதி]*

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.54-55.*

# கடிதம் - 2.11

முத்தமிழ்க் கழகம், 1944
'இன்ப மாளிகை'
கானாடுகாத்தான்

எங்கள் கவி அரசர்க்கு! வணக்கம்! உங்கள் கார்டு வந்தது.

........................

மணமகனார் ஞாயிறு அன்று வருவதாக எழுதியிருக்கிறார். சுத்தமான பகுத்தறிவுப் பக்தர். கூடுமானால், முருகு சுப்பிரமணியத்தையும் வர அழைத்துக்கொள்வோம்.

..........................

..........................

**- மஞ்சுளாபாய் வயிசு.**

- *பாவேந்தர் பாரதிதாசனின் மூத்த மகள் சரசுவதியின் திருமணத்தை முன்னின்று நடத்திய பெருமைக்குரிய இணையர்கள் கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் - மஞ்சுளாபாய் ஆகியோர். திருமதி மஞ்சுளாபாய் பாரதிதாசனின் மகளை மணக்கும் மாப்பிள்ளை குறித்து எழுதிய கடிதம் இதுவாகும்.*
- *பல பகுதிகள் விடுபட்டுள்ளன.*
- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.116.*

# கடிதம் - 2.12

27.2.44

முத்தமிழ் நிலையம்
கருப்பண்ணக் கவுண்டர்
பஞ்சாயத்துக் கோர்ட்டுப் பிரசிடெண்டு
நாமக்கல்.

ஐயா அவர்கட்கு,

வணக்கம்.

யாரையும் அங்கு அனுப்பும் நிலையில் இல்லை. நிலையம் சம்பளம் கணக்குப் பார்த்துத் தீர்க்க வேண்டும். பணம் இல்லை. அவர்களும் வர ஒப்பவில்லை. 29 அநேகமாக யாரையாவது வரச் சொல்லுகின்றோம்.

ராசிபுரத்திற்குப் பிறகு நிலையத்தைக் கலைக்க எண்ணுகிறோம். எங்கள் வகையில் யாரும் தென்பட்டாலும் ஒப்படைக்கிறோம். உங்கள் வகையில் யாரும் இல்லையா? யாராவது ஒப்புக்கொண்டால் கலைப்பதைவிட அது நல்லது. உங்கள் முழு முயற்சியும் பெரிய மனிதரை நாம் முன்பு நினைத்தபடி - ஒருவரிடம் ஒப்படைப்பதில் செலவிட வேண்டியுள்ளது. கலைப்பதும் சிறப்புறப் பேர் கெடாமல் முடிக்கவே முயற்சி செய்கிறோம். ஆகையால் தங்களுடைய பதிலை உடன் எதிர்பார்க்கிறோம். கடிதங்கள் வர நாளிரண்டு பிடிக்கின்றன. 23 கார்டு 27 தான் கிடைத்தது.

அன்புள்ள

**முருகு சுப்பிரமணியன்.**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.56.*

# கடிதம் - 2.13

பிப்ரவரி இறுதி 1944

முத்தமிழ் நிலையம்
சேலம் சத்திரம்
செவ்வாய்ப் பேட்டை.

ஐயா அவர்கட்கு,

வணக்கம்.

என் கடிதம் கிடைத்திருக்கலாம். நிலைமை மோசமாகி விட்டது. நாமக்கல்லாரும் முன்னதாகச் செலவிடத் தயாரில்லை. கலையும் நிலை மணிக்கணக்கில் இருக்கிறது. நீங்கள் உடன் புறப்பட்டால் மிக நலம்.

........................................

........................................

முருகு.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.55.*

# கடிதம் - 2.14

தமிழ் வாழ்க
முத்தமிழ் நிலையம்
இராமநாதபுரம் கோட்டம்

2.4.44

சென்னை

முருகப்பா

அன்புள்ள கவிஞர் பாரதிதாசன் அவர்கட்கு நலம்.

..........................................

..........................................

"இசையமுது"க்குக் காகிதம், மேல் அட்டை, படம், விற்பனையாளர் ஊதியம் இன்னும் சில சிலவுகள் முருகும், நானும் கணக்குப் போட்டுப் பார்த்ததில் எல்லாம் ஒன்றுக்கு நாலு பங்கு விலையாயிருக்கிறபடியால், இப்பொழுது விலை 1.4.0 ஒன்றேகால் போட்டால்தான் நமக்குக் கட்டும். வேறு இடத்திலுள்ளது மட்டமாக இருக்கும்.

வேறு நிலையத்தார் மேல் அட்டை அழகாகப் போட்டு உள்ளே சாரமில்லாது இருக்கும். நம்மதோ உள்ளும், புறமும் இனிமை இருப்பதால் நன்கு விற்குமென நம்புகிறேன்.

..........................................

..........................................

"இருண்டவீடு" திருத்தி அனுப்பியது வந்து வேலை நடைபெறுகிறது.

..........................................

..........................................

புத்தகத்திற்குக் காகிதம் கிடைப்பது கஷ்டமாகயிருக்கிறது. பணம் அதிகம் கு(கொ)டுத்து பிளாக் மார்க்கடில் பிரயாசை எடுத்தாவது பத்துப் புத்தகமாவது வெளியிட வேணும். முயற்சி எடுத்துக் கொள்ளுவோம். நல்ல முறையில் வந்ததும் நிலைய சம்பந்தமாகக் கொடுக்க வேண்டியவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து வருவோம். பங்காளர் பணமில்லையெனக் கைவிட்டனர். அவர்கள் மறுபடியும் நம் காலில் வந்து சேரும்படி செய்யவேணும்.

தங்கள் அன்புமிக்க
**முருகப்பா**

முத்தமிழ் நிலையம்.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.57.*

# கடிதம் - 2.15

வடஆற்காடு ஜில்லா 4வது ஜஸ்டிஸ் மாநாடு
வாணியம்பாடி

வாணியம்பாடி 26.4.1944

எம்.பி. வடிவேலு, வரவேற்புக்கமிட்டித் தலைவர்

எஸ். சபாரத்தினம், செயலாளர்.

அன்புள்ள தோழா்,

கனகசுப்புரத்தினம் அவர்களுக்கு வணக்கம். தங்கள் தபால் கிடைத்தது. பார்க்க மனது குழம்பிவிட்டது. நிற்க. தங்களால் பிள்ளைகளுக்குச் சொல்லி வைக்கப்பட்டு நடிக்கப்பட்டு வரும் நாடகம் இருப்பதாய்க் கேள்விப்பட்டேன். அதன் பூரா விபரம் உடனே தயக்கமில்லாமல் எழுத வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். பின்னால்தான் மற்றவைகளுக்கு யோசனை. உடன் பதில் வணக்கம்.

**ஜி. பழநிரத்தினம்**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.59.*

# கடிதம் - 2.16

சென்னை
29.4.44

இராவணன்

கவியரசர் அவர்களுக்கு இராவணன் வணக்கம். நான் இன்று ஊர் புறப்படுகிறேன். தாங்கள் காரைக்குடி முதலிய ஊர்களுக்கு வரும் விஷயத்தைக் கவனித்துத் தங்களுக்குச் சௌகர்யமான தேதி விபரத்திற்குத் தயவு செய்து என் திருப்பத்தூர் முகவரிக்கு விரைவில் எழுதும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். கோபதிக்கு என் அன்பு. திரு. முத்தய்யா அவர்கள் வணக்கம் கூறுகிறார். மற்ற விவரங்கள் நேற்றைய கடிதப்படியே.

தங்கள்
வ. இராவணன்

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.66.*

# கடிதம் - 2.17

1.5.44

27.5.44 கோபியில் திராவிட வாலிபர் மாநாடு. ஆர்வமிக்க தோழர்களின் அரிய முயற்சி. நானும் நண்பர் பலரும் வருகிறோம். பெரியார் மாநாட்டுத் திறப்பாளர். தாங்கள் அவசியம் வந்திருக்க வேண்டுமென்று விழைகின்றேன். கோபித் தோழர்களின் நீண்ட நாளைய அவா அது. மாநாட்டிலே 'முத்தமிழ்' எனும் பொருள் பற்றித் தாங்கள் சொற்பொழி வாற்றக் கோருகிறேன். கோபியில் 10, 11ந் தேதிகளில் கம்பர் மாநாடு. கலையின் பெயர் கூறி வம்பு வளர்ப்போருக்குத் தங்களின் ஆணித்தரமான கருத்துக்களை இம்மாநாட்டிலே நல்க வேண்டுகிறேன்.

வேறு வேலைகள் இருப்பினும் தயை கூர்ந்து இம் மாநாட்டினுக்கு வரக் கோருகிறேன். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

- *அண்ணா காஞ்சியிலிருந்து எழுதியது.*
- *மன்னர்மன்னன், கறுப்புக் குயிலின் நெருப்புக்குரல், ப.364.*
- *இக்கடிதத்தில் யார் யாருக்கு எழுதினார் என்னும் குறிப்பு வெளிப்படையாக இல்லாவிட்டாலும் அண்ணா கவிஞர்க்கு எழுதினார் என மன்னர்மன்னன் கூறியுள்ளார்.*

# கடிதம் - 2.18

17.5.1944

உயர்திரு. கவிஞர் பெருமானவர்களுக்கு, தங்கள் கருணாநிதி வணக்கம். நிற்க, 7.5.1944ல் இரவு பழனியப்பன் என்ற சீர்திருத்த நாடகம் நடத்த முடிவு செய்திருந்தோம். தியேட்டர் கிடைக்காததால் 28.05.44ல் நடத்த முடிவு செய்துள்ளோம். பெரியார் அவர்களும் வருவார்கள். தாங்கள் 27.05.44ல் சு-ம-ஆண்டு விழாவில் கலந்து கொள்வதோடு 28உ இரவு எமது தமிழ் மாணவர் மன்ற நாடகத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். பதில் தேவை. வணக்கம்.

திரு. மு. கருணாநிதி

- *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப.364.*

# கடிதம் - 2.19

5.6.44

முருகு
கோனாபட்டு

கவிஞர் பாரதிதாசன் அவர்கள்

புதுவை.

ஐயா அவர்கட்கு,

வணக்கம். தங்கள் கடிதங்கள் வந்தன. செயலற்ற நிலையில் நான் இருக்கிறேன். என்னிடம் தந்தேன் என்கிறீர்கள்! இவர்களும் 'அப்படித்தான் உன்னால்தான்!' என்கிறார்கள்.

நல்லெண்ணம் நிலவ வேண்டியது அவசியம். கட்டுப்பாடும் ஒழுங்கும் இரண்டு பக்கமும் நிலவவேண்டும். அறுந்துள்ள தொடர்பை மீண்டும் கூட்ட வேண்டும்.

புரூஃப்பை அனுப்பாமல் வைத்திருக்கிறீர்கள் - வருத்தம் நிலவிவருவது நல்லதல்ல.

நாவலர் பிரஸில் அச்சாகிறது புத்தகங்கள். என்னுடைய பழய கடிதத்திற்குத் தங்கள் கடிதங்களின் பதில் இல்லையே! போட்டோ பிளாக் தங்களிடம் இருக்கிறதே.

அன்புடன்

முருகு

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.61.*

# கடிதம் - 2.20

ஓம்
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

தங்கல், வேலூர் (சேலம்)
நாள் : உ.எ.சச.
2.7.44

விடுப்பவர்,

'வித்துவான்'
வை. கனகசபையென வழங்கும்,
பொன்னம்பலனார்.
தலைமைத் தமிழ் அறிவிப்பாளர்
கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளி
வேலூர் (சேலம்)

பெறுபவர் :

உயர்திருவாளர்,
தமிழகப் புரட்சித் தமிழ்ப் பெரும்புலவர்
அவர்கட்கு,
(கனக சுப்புரத்தினம்)
புதுவை.

சுவைத்த சொல்லும் பழுத்த பொருளும், விழுத்தகு உணர்வும் வேண்டுசீர் திருத்தமும், பால் போலினிக்கும் பரவுறு கொள்கையையும், பிறவும் பொருத்தப் பெரும்பயன் நூல்கள், தீந்தமிழ் மொழியில் சிறக்க யாத்த, தீந்தமிழ்த் தோன்றல்! செந்தமிழ் நம்பி! வணக்கம் பல. இருபாலும் நலம்.

அறிவுறு ஆன்றோய்! நாம் இருவேமும் வேலூரிற் பேசிய கருத்துக்கள் நினைவிருக்குமென்று கருதுகின்றேன். தங்கள் பெருமையார் தலைமையில் திருச்சியில் நடைபெற இருக்கும் தன்மான இயக்க மாநாட்டிற்கு மறுநாள் வேலூரில் கந்தசாமிக் கண்டர் உயர்நிலைப் பள்ளியில் தமிழ்க் கழகச் சார்பில் கூட்டம் நிகழ்வுற ஏற்பாடுகள் செய்கின்றோம். தாங்கள் நம் அருமையார் பெரியார், அண்ணாத்துரை முதலானவர்கள் வேலூர் எழுந்தருள வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து இசைவு முதலான செயல்கட்கு விடையிறுக்கவும்.

பீடுறு பெரும!

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர் வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கு, கங (13) யாண்டுகளாக யான் வேலூர் கந்தசாமிக் கண்டர் பள்ளியில் முதல் வகுப்பு முதல் ரு - ஆம் படிவம் (V form) வரைக்கும் உள்ள வகுப்புகட்குச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தமிழ் நூல்களையே பாடமாக வைத்து வருவதாக நன்கு எடுத்துக்கூறி ஆவன செய்வீர்களென எண்ணுகின்றேன். கூOO மாணவர் கOOO மாணவர் வரை பயிலுகின்றனர்.

கண்போற் சிறந்த காதற் கேளீர்

எல்லா நலங்கட்கும் செய்திகட்கும் இறை இறுக்குமாறு வேண்டுகின்றேன். தங்கள் வாழ்க்கைத் துணைவியார்க்கும் அறிவுறு மக்கட்கும் என் அன்பார் வினவுதலும் நன்றியும் உரியன ஆகுக. நலம்.

இ.த.அ.

**வை. பொன்னம்பலனார்**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.63.*

## கடிதம் - 2.21

ஈரோடு 3.7.44

அன்புள்ள நண்பர் அவர்கட்கு, தங்கள் 26.6.44 ரிஜிஸ்டர் கடிதம் கண்டேன். அதில் கண்ட தங்களது மனவருத்தம் அவ்வளவும் தப்பு அபிப்பிராயத்தின் மீது ஏற்பட்டவை என்பது எனது தாழ்மையான கருத்து. நான் தங்கள் கடிதத்தை வைத்து ஆபீசில் விசாரித்ததில் கண்ட உண்மை வருமாறு.....

பத்திரிகையில் இடம் இல்லை; விளம்பரம் வேண்டியவர்கள் அதிகமாகப் போய்விட்டார்கள். அதோடு இயக்கத்தால் வயிறு வளர்ப்பவர்கள் அத்தனை பேரும் விரோதிகளாய் விட்டார்கள்; இந்த நிலையில் பத்திரிகை நடத்துவது கஷ்டமாக இருப்பதுடன் உங்கள் போன்றோரின் நிஷ்டூரமும் ஏற்பட வேண்டியதாயிற்று.... தங்களைப் போன்றவர்கள் பத்திரிகை தவறுதல்களை - அதுவும் இயற்கைத் தவறுதல்களை இவ்வளவு பெரிதாகக் கருதுவது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.

தங்கள் விஷயத்தில் நான் எப்படி நடந்து வந்திருக்கிறேன் என்பது நான் சொல்லி மற்றவர்கள் அறிந்துகொள்ள வேண்டியதாய் இருந்தால் அது என்னுடைய குற்றம்தான்....

தங்கள் கவிதையை நான் பிரசுரித்ததன் மூலம் நான் தங்களுக்குக் கடமைப்பட்டவன். ஆனால் அதை லாபத்துக்குப் பதிப்பிக்க நான் ஆசைப்படவில்லை. ஆறு அணா அல்லது எட்டு அணா விலைக்குப் போட வேண்டும் எனவே ஆசைப்பட்டேன். பிறகு தாங்கள் சொன்னதாலேயும் புத்தகம் நன்றாயிருக்க வேண்டும் என்பதாலேயும் சற்று நன்றாகப் போட்டு 230 பக்கம் 1.8.0 ரூ விலைபோட்டு விட்டேன். 25, 30 வீதம் கமிஷன் கொடுக்கிறேன். 200 புத்தகம் பலருக்கு இலவசமாய் உதவினேன். இனியும், 600, 700 புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றில் பல வெளியூர்க்காரர்கள் விற்பனைக்கு எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். இதுதான் புத்தக நிலை.

தங்களுக்கு விரோதமாக என்னிடம் யாரும் பேச மாட்டார்கள். பேசினாலும் நான் கேட்டுக் கொண்டிருக்கவும் மாட்டேன்.

எனக்குள்ள நம் இயக்க எதிரிகளை என்னால் அடக்க முடியும். ஆனால் அவர்கள் கெட்டுப்போவார்கள் அல்லது இயக்கத்தை விட்டு ஓட வேண்டியவர்களாகவும் ஆகிவிடு வார்கள். எப்படிப்பட்ட எதிரியாலும் எனக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்படாது.

ஆதலால் கவலை எடுத்துக்கொள்வதில்லை. தங்களுக்கும் யாராலும் எவ்விதக் குறையும் ஏற்பட முடியாது. ஆகவே தயவு செய்து தப்பு அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ள வேண்டுகிறேன்...

- *பாரதிதாசன் பெரியார்க்கு எழுதிய கடிதத்திற்குத் (1.35) தன் கைப்பட எழுதிய எட்டுப்பக்கம் கடிதத்தில் சில பகுதிகள்.*
- *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப.367.*

கோவை மாவட்ட (ஜில்லா)
திராவிட இளைஞர் மாநாடு
(17-4-44-ல் ஈ.ரோட்டில் நடைபெறும்.)

அர்ச்சுனன்,
(கொங்கு இளையபட்டக்காரர்)
வரவேற்புக் கழகத் தலைவர்

சந்தானம்,
செயலாளர்.

ஈ.ரோடு.
19-9-1944.
13.9.44

டாக்டர் பாரதிதாசன் அவர்கள்
புதுவை.

அன்புடையீர், வணக்கம். தஞ்சை மாவட்ட திராவிட மாணவர் மாநாட்டார் தங்களை அந்த மாநாட்டுக்கு தலைமை வகிக்கச் செய்ய பெரிதும் விரும்புகின்றனர். 26-9-1944-ல் தங்களுக்கு சரஸ்வதி பூசையை முன்னிட்டு ஓய்வு கிடைக்குமாதலின் தயவுசெய்து மாநாட்டார் விருப்பத்துக்கிணங்கி அந்த மாநாட்டுக்குத் தலைமை வகிக்க விரும்புகிறேன். தயவு செய்து பதில் எழுத கோருகிறேன்.

தங்களன்புள்ள
ஈ.வெ. ராமசாமி

# கடிதம் - 2.22

கோவை மாவட்ட (ஜில்லா)
திராவிட இளைஞர் மாநாடு
(17-4-44-ல் ஈரோட்டில் நடைபெறும்)

அர்ச்சுனன், ஈரோடு
(குமார இளையபட்டக்காரர்) 13.9.1944
வரவேற்புக் கழகத் தலைவர்

சந்தானம்,

செயலாளர்.

தோழர் பாரதிதாசன் அவர்கள்

புதுவை.

அன்புடையீர், வணக்கம். மாவட்டத் திராவிட மாணவர் மாநாட்டார் தங்களை ஷெ மாநாட்டுக்குத் தலைமை வகிக்கச் செய்யப் பெரிதும் விரும்புகின்றனர். 26.9.1944-ல் தங்கட்குச் சரஸ்வதி பூசையை முன்னிட்டு ஓய்வு கிடைக்கு மாதலின் தயவுசெய்து மாநாட்டார் விருப்பத்துக்கிணங்கி ஷெ மாநாட்டுக்குத் தலைமை வகிக்க விரும்புகிறேன். தயவுசெய்து பதில் எழுதக் கோருகிறேன்.

தங்களன்புள்ள

**ஈ.வெ. ராமசாமி**

• *பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம், புதுச்சேரி.*

# கடிதம் - 2.23

சிவகாமு விலாஸ்
தேவகோட்டை

14.9.1944

கே. முத்துசுவாமி வல்லத்தரசு
வழக்கறிஞர்

வணக்கம்.

தங்கள் கடிதம், புத்தகம், விவகார விவரம் கொண்ட இதழ் முதலியன கிடைத்தன. சென்ற வாரத்தில் முத்தமிழ் நிலையத்தைச் சேர்ந்த ஒருவர் வந்தார். சங்கதிகளைச் சொன்னார். கிரிமினல் சட்டப்படி நடவடிக்கை எடுப்பது உசிதமல்ல; பயன்படக் கூடியதல்ல என்று யோசனை கூறினேன். சிவில் நடவடிக்கை எடுத்தால், புத்தகங்களைப் பறிமுதல் செய்தல், நஷ்டஈடு முதலிய பரிகாரங்களைத் தேட இடமுண்டாகும். சிலவு விவரங்களும் சொன்னேன். சிவில் நடவடிக்கைகள் இங்குத் தேவகோட்டையில் போட ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் மதுரையில் போடவேண்டும். அல்லது ஹைக்கோர்ட்டில் சென்னையில் போடவேண்டும். இங்குச் செய்ய வேண்டிய வேலை ஒன்றுமில்லை. வேண்டுமானால் விஷயத்தை என் பொறுப்பில் வைத்து நடத்த உத்தேசித்தால் என்னாலியன்றதைச் செய்வதாகச் சொல்லியுள்ளேன். தங்களுக்கு விவரங்கள் அனைத்தையும் தெரிவித்துப் பதில் அளிப்பதாகச் சொல்லிப் போனார். இதுவரையில் ஒன்றும் கிடையாது.

பில்கணீயம் என்ற பதிப்பின் பிரதி ஒன்றும் அனுப்பி வைக்க வேண்டியது. தங்கள் புத்தகங்கள் அநேகம் உள.

கூடிய வரை ஒவ்வொன்றிலும் ஒரு பிரதி வைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டியது. உள்ள விவரங்களைக் கொடுத்து வருகிறேன்.

பதில் எதிர்பாராத வண்ணம்,

தங்களன்புள்ள
**க.மு. வல்லத்தரசு.**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.69.*

# கடிதம் - 2.24

கரந்தை

19.9.44

அன்பார்ந்த தலைவர்
புரட்சிக்கவி பாரதிதாஸன் அவர்கட்கு,

கோ.சி. பெரியசாமிப் புலவன் கணக்கில் வணக்கம் புரிந்து எழுதிக் கொண்டது.

பேரருட்பெரும! தாங்கள் தஞ்சை மாவட்டத் திராவிட மாணவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்க இவண் போதரு காலையில் தங்களின் பழைய நண்பனாகிய என்னில்லிற்றங்கி எளியேனுண்ணுமுணவை ஏற்று மகிழ வேண்டுகின்றேன். தாங்கள் மா்நாட்டிற்குத் தவறாது வந்து தலைமை ஏற்றருள வேண்டுகின்றேன். தங்கள் மறுமொழியை விரும்புகின்றேன்.

தாங்கள் என்னுடன் தங்கியிருத்தலில் யான் பெரிதும் மகிழ்வேன். தாங்கள் வரும் வண்டியையுங் குறிப்பிட்டெழுதவும்.

இங்ஙனம்,

**கோ.சி. பெரியசாமிப் புலவர்**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.71.*

# கடிதம் - 2.25

அரண்மனை
செட்டிநாடு

25.9.1944

அள. லட்சுமணன்

மதிப்பிற்குரிய கவிஞர் அவர்களே,

செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜாசர் அண்ணாமலை செட்டியாரின் பேரன் என்று என்னை அறிமுகம் செய்து கொள்ள விரும்புகிறேன்.

உள்நாட்டிலும் அனைத்து நாடுகளிலும் வதியும் அறிஞர் களுடைய கையொப்பங்களைப் பெற்று நான் சேர்த்துக் கொண்டிருக்கிறேன்.

எனவே உங்கள் கையொப்பம் ஒன்றினைப் பெற மிக்க ஆவல் உடையேன்.

என்னைப் போன்ற இளைஞர்கட்குத் தேவைப்படுகின்ற குறிக்கோள் வாசகம் ஒன்றுடன் தங்களின் ஒப்பமிட்டு அனுப்புமாறு வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,
**அள. லட்சுமணன்**

உங்களின் மறுமொழியைப் பெறுவதற்காக அஞ்சல் தலை ஒட்டிய உறை ஒன்றினை இத்துடன் இணைத்து அனுப்பியிருக்கிறேன்.

• *மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், ப.345.*

# கடிதம் - 2.26

4.10.44

“குடும்ப விளக்கு இன்னும் முடிவு பெறாததற்கு வருந்துகிறேன். ஆனமட்டும் விரைவுபடுத்திக் கொண்டிருக் கிறேன். முடிவு தெரிவிக்கும் நாள் எதிர்பாராத விரைவில் வரக்கூடும்.

அலுவலகச் செய்தி சில தாழ்த்தாது தெரிவிக்க வேண்டும். ஒரு திங்களாகப் பலர் அனுப்பப்பட்டனர். என்னை அனுப்புவது போன்ற நடிப்புகள் இருந்தன. குற்றத்திற்கு இடம் கொடுக்காது நடந்தேன். எனவே தோழர் வேதரத்தினம் இன்று அழைத்து, அலுவலக நிலைமை யாக்கத்தையொட்டி ஆட்குறைப்பு ஏற்படுத்த வேண்டியிருப்பதால் சேதமில்லா நிலையில் விலகும் படியும் உதவியும் நல்லெண்ணமும் தருவதாகவும் கூறினர்!

ஒரு திங்கள் ஊதியம் (அக்டோபர் ஊதியம்) முன்பண மாகப் பெற்று விலகிக் கொண்டேன். மேற்பணி வகையில் துணை செய்வதாகக் கூறினர்.

தங்கள் நல்லுரையும் வாழ்த்தும் எனக்கு வெற்றி தரும் என்று உறுதியாய் நம்புகிறேன். இப்போது ஒரு திங்களாக மறைமலையடிகளுடன் பழக வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் ஒரு தடவை குடும்பத்துடன் வீடு வந்திருந்தனர். ஒரு தடவை நாங்கள் அங்குச் சென்றிருந்தோம். அவர்களுடன் நெடுநேரம் பலகால் அளவளாவினேன். சமயப் பற்று ஒன்று நீங்கலாக, உருப்படியான எல்லா ஆக்க வேலைகளிலும் நம் இயக்கத்தைப் பற்றி அவர்கள் நல்லெண்ணங்கள்

கொண்டுள்ளவர்கள். தங்கள் நூல்கள் பார்வையிட்ட அளவு, மிகவும் மனநிறைவு உடையவை என்று மகிழ்ந்து கூறினர்.

மயிலையில் இளைஞர் சங்கத்திலும் நம் கட்சிக்குப் பேராதரவு இருக்கிறது. அரசியல் நிலை பக்குவமாய் இருக்கிறது. தலைவர்களின் முயற்சிகள் இந்நேரம். உயிர் நிலையானவை...."

- *கா. அப்பாத்துரையார் சென்னையிலிருந்து கவிஞருக்கு எழுதியது.*
- *மன்னர்மன்னன், கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல், ப.388*

# கடிதம் - 2.27

1.12.44

நாகை தமிழ்க்கழகம்
நாகப்பட்டினம்

பேரன்புடையீர்,

இக்கழகச் சார்பில் வரும் தைத்திங்கள் 7, 8ம் நாட்களாகிய சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் (20, 21.1.45) தமிழ்த் திருநாள் கொண்டாடப்படும். அதுபோழ்து தாங்கள் விழாவிற் கலந்து ஒரு சொற்பொழிவாற்ற வேண்டுகிறோம். தாங்கள் பேச விரும்பும் பொருள் இன்ன என்பதைக் குறித்து மாற்றம் விடுக்குமாறு வேண்டுகிறோம்.

**ந. சண்முகம்**

நாகை தமிழ்க் கழகம்.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.72.*

# கடிதம் - 2.28

9.1.1945

P.R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம்.ஏ.,
பிரின்சிபால்
கரந்தைப் புலவர் கல்லூரி
தஞ்சாவூர்.

அன்புள்ள அய்யா!

வணக்கம். இங்குப் பலவிதமான இனவெழுச்சித் தொண்டு புரிந்துவரும் கரந்தை இளைஞர் மன்றத்துச் சார்பில் 20.1.1945 மாலை நடக்கவிருக்கும் தமிழ்த் திருநாளில் 'கலைப்பாசறை' எனும் திங்கள் வெளியீடொன்றைக் கையெழுத்துப் படியாகத் துவக்க ஏற்பாடு நடைபெறுகின்றது. அதற்குத் தங்கள் வாழ்த்துப் பாவினைப் பெரிதும் விழைகின்றோம். கட்டாயம் அனுப்புவீர்கள் என்னும் துணிவுடையேன்.

அன்புள்ள
**P.R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.73.*

# கடிதம் - 2.29

சென்னை
15.2.45

புலவர் பெருந்தகையீர்,

வணக்கம். நலம். தங்கள் நலமறிய வேணவா. எனது திருமணம் 21.2.45ல். தங்கள் வருகை அனைவராலும் விரும்பப் படுகின்றது. அவாவுகிறேன். தங்களுக்கு இருக்கும் பல வேலைகளுக்கிடையே யானும் தொந்தரவளிப்பதற்கு மன்னிப்பீர்கள் என நம்புகிறேன். தங்கள் வாழ்த்தினை, அச்சிட்டு வழங்க முன்னர் அனுப்பித்தரின் மிகவும் நன்மையாம். தங்கள் கடிதங்கண்டு கடமையை நிறைவேற்றுகின்றேன். பிற பின்.

தங்களன்புள்ள

**அன்பழகன்**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.74.*

# கடிதம் - 2.30

இராஜபாளையம்
14.3.45

கவியரசே!

தங்களைச் சந்தித்து என் சொந்த வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளைப் பற்றி(த்) தங்கள் கருத்தையடைய விரும்புகிறேன். மதுரை, இராமநாதபுரம் பக்கம் தாங்கள் வருவதாயின் எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விபரமாகப் பின்னர் எழுதுகிறேன்.

உண்மையுள்ள
**தனுஷ்கோடி ராஜா**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.76.*

# கடிதம் - 2.31

20.3.45

காரைக்குடி

கவியரசர் அவர்கட்கு,

வணக்கம், பலப்பல.

தாங்கள் இந்நகர் மாநாட்டிற்கு வருகிறீர்களென்ற விளம்பரத்தைப் பார்த்து முகிற் கூட்டங் கண்ட மஞ்ஞைக் குழாம் போன்று பெருமகிழ்வெய்தினோம். ஆனால் நறுமணங் கமழுமென் றாவலோடிருக்கும் போழ்து துர்நாற்றம் பெற்றாற் போன்றும் மகள் மகிழ்வுடன் இருப்பாள் என்றெதிர் நோக்கி யிருக்குங்காலை அவள் விதவையானாளென்று தாய் கேட்டு விட்டால் எத்துணை இன்னலுறுவாளோ அத்துணை இன்னலெய்தினோம். தங்களிடமிருந்து வந்த தந்தியின் விபரமறிந்ததும் பெரும் ஏமாற்றமடைந்தோம்.

வானோக்கி வாழுங்குடிகட்கு வழிந்தோடும் புதுவெள்ள மென்ன தங்கள் வரவு நோக்கியிருக்கும் எமக்கு மலர்மணம் வீசும் காற்று வீசும்படி செய்ய வேண்டுமாய் இரப்போரினும் இறங்கிய குரலுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் உழுவற்பரிவுடைய
**சாமி. முதுகுன்றத்தான்.**
கையெழுத்துப் பத்திரிகாசிரியர்,
கழகத் தலைவன்.
காரைக்குடி
இராமநாதபுரம்.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.77.*

# கடிதம் - 2.32

தியதி 7.5.45

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கேமுழங்கு!

கவி பாரதிதாசன் கழகம்
வடிவீசுவரம் - நாகர்கோவில்

கவிஞர் பாரதிதாசன் அவர்கட்கு நீல. நாராயணன் வரைவது.

அருமைக் கவிஞரே வணக்கம். தங்கள் கடிதம் கண்டேன். ஆச்சரியம் கொண்டேன். எந்தப் பத்திரிகையில் இச்செய்தி வெளியாய் உள்ளது என்றறிய ஆசைப்படுகிறேன். ஏனெனில் இம்மாதிரி ஓர் அறிக்கை வெளியிட நான் கனவில் கூட நினைத்ததில்லை. இருகவிஞருக்கும் வேறுவேறு கமிட்டிகள். நாமக்கல்லார் கமிட்டி தன் வேலையை முடித்து விட்டது. பணமும் அனுப்பியாய்விட்டது. எனவே, இரு கவிஞருக்கும் ஒரே மேடையில் பணமுடிப்பளிக்கப்படும் என்ற செய்தியை நம்ப வேண்டாம். ஒருபோதும் இரு கமிட்டியும் இணைக்கப்படமாட்டாது. இதே ஓர் ருசிகரமான செய்தி நாஞ்சில் நாட்டிலே 'கொறண்டி, கண்ணன் புதூர்' என்ற இரு ஊர்களும் நமது கோட்டையாகத் திகழ்கிறது. அங்கே நாமக்கல்லாருக்கு நிதி திரட்ட அக்கமிட்டியைச் சார்ந்த ஒருவர் என்னையும் உடன் வந்து ஒத்தாசை செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். என்னைப் பற்றி நன்கு தெரிந்திருக்கும் அவர் இப்படிக் கூறியது எனக்குக் கிண்டலாகத் தோன்றியது. எனவே நானும் கிண்டலாகவே பேசத் தொடங்கினேன். அந்தப் பேச்சு இது.

அவர் : கண்ணன் புதூர் வரை சற்றுவர வேண்டுமே. நான் : ஏன்? அவர் : நிதி திரட்ட. நான் : யாருக்கு? அவர் :

புரட்சிக் காலப் புன்னகைக் கவிஞருக்கு. நான் : காதலியின் கடைக்கண் வீச்சு காதலன் மீது விழும்போது புன்னகை தவழும். மதலையின் மழலை கேட்கும்போது மாதாவின் முகத்தில் புன்னகை தவழும். இது இயற்கை.

ஆனால் முறுக்கேறிய நரம்புகளில் தெரித்தோடுகிறது ரெத்தம். உணர்ச்சியால் உந்தப்பட்ட மக்கள் உயிரைப்பலி செய்து உரிமைக்காகப் பச்சை ரத்தம் பரிமாறிப் பிணக்கோட்டை நிற்கும் புரட்சிக் காலத்திலே, மக்களின் கொந்தளிப்பை ஜனசக்தியை ஒன்று திரட்டி உருவகப்படுத்தி உய்யும் வழியினைக் காட்டி, போராட்டம் வெற்றி பெறத் திட்டம் தந்து மக்களை ஊக்குவித்து முன்னணிக்கு இழுத்துச் செல்ல வேண்டியது ஒரு நாட்டின் கவிஞர் கடனாயிருக்க அதை மறந்து, கண்ணைமூடிக் காந்தியைப் பின்பற்றிக் கதர் மெத்தை மீதமர்ந்து புன்னகை செய்யும் புலவனைக் கவிஞன் என்று கூறவோ, அவருக்கு நிதி திரட்ட உழைக்கவோ நான் தயாரில் இல்லை என்று கூறினேன். அந்தத் தோழரின் முறைப்பான பார்வையோடு எங்கள் பேச்சு முடிந்தது.

இந்நிலையிலே இரு கவிஞருக்கும் ஒரே கூட்டத்தில் பணமுடிப்பு என்பது விசித்திரம். எனவே எந்தப் பத்திரிகையில் இச்செய்தி வந்தது என்று தெரிவித்தால் மேல் நடவடிக்கைக்கு உதவியாய் இருக்கும்.

நிற்க. நமக்கு ஆதரவு சற்று குறையும் என்பது நல்ல....* அறிவேன். ஆயினும் இந்நிதி விடயத்தில் நாமக்கல்லாரை விட நமக்குக் கூடுமே தவிர குறைவுபடாது என்று நம்புகிறேன். மேலும் நிதிக்காக ''குமுறும் எரிமலை'' என்றொரு நாடகமும் பயின்றுள்ளோம். சீ.பி. ஆட்சியில் இந்நாடகத்திற்கு லைசென்ஸ் கிடைக்குமோ, கிடையாதோ சந்தேகமாய் இருக்கிறது. கிடைத்து விட்டால் நிதி விடயம் அமோக வெற்றி பெறும்.

ஆகவே லைசென்ஸ் பெறவே முயற்சிக்கிறோம். தங்களைக் குறைவுப்படுத்துவதே நோக்கமாய்க் கொண்ட சில தோழர்கள் இங்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படி இருந்தால் வீட்டிற்குள்ளிருக்கலாமே தவிர வெளியிலே தலைகாட்ட முடியாது. ஏனெனில் அவ்வளவு தூரம் தங்கள் கவிதை வாலிபர் உள்ளத்தில் துள்ளி விளையாடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிறரின் நலம்.

இவ்வண்ணம்
தங்கள்
**நீல. நாராயணன்.**

* *சிதைந்துள்ளது.*

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 78-80.*

## கடிதம் - 2.33

"கண்ணதாசன்"
(ஏ.எல்.எஸ். முத்தையன்)
2.1.46

முகாம்

Associate Editor
Thirumagal
Ramachandrapuram P.O.
Pudukottai State

திரு. பாரதிதாசனார் அவர்கள்

சேலம்

"தண்டமிழ் நாட்டின் தனிப்பெருங்கவிஞர்,

வணக்கம்! என்னைத் தாங்கள் யாரென்று நினைவு கொள்ளுமுன் யானே அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். 'திருமகள்' மாதமிருமுறைப் பதிப்பின் கூட்டு ஆசிரியராக இருக்கிறேன். திரு. முருகு சுப்ரமணியனார், திரு. வித்துவான் வி.சு. திருநாவுக்கரசு, திரு. கண. இராமநாதன் முதலியோரது நெருங்கிய நணபன்.

திரு. வி.சு. திருநாவுக்கரசு அவர்கள் தங்களுக்குக் கடிதம் எழுதி அறிமுகப்படுத்திக் கொள்ளுமாறும், தானும் கடிதம் எழுதுவதாகவும் கூறினார்கள். எனது வெகு நாளைய கனவைப் பூர்த்தி செய்துவைத்த அவருக்கு என் நன்றி.

முல்லைப் பதிப்பகம் திரு. ப. முத்தய்யா அவர்களுக்கு எழுதி, தங்கள் சம்மதத்தோடு கிடைத்தது தங்கள் 'பிளாக்' மிக மகிழ்வு.

வருகிற பொங்கல் மலருக்குத் தங்கள் விஷயம் ஒன்று அவசியம் தேவை. அதோடு தங்கள் வாழ்க்கைக் குறிப்பொன்றும் தேவை. எவ்வளவோ வேலைகளுக்கிடையில் இதையும் கவனித்துக் கொள்ளுமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைத் தங்கள் மாணவனாக மதிக்க வேண்டுகிறேன். ஏனெனில் தங்களை எனது குருவாக மதித்து வருகிறேன்.

பத்திரிகையைக் கொண்டு போக வேண்டிய முறை பற்றித் திரு. முருகு, ராமனாதன் முதலியோரிடம் அடிக்கடி கலந்து கொள்ளுகிறேன்.

தங்களிடம் யான் கேட்க வேண்டியது ஒன்று மட்டும் உண்டு. எனக்கு வயது பத்தொன்பது. ஒன்றரை ஆண்டு களாகப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். அவற்றில் ஓராண்டு பிராமணப் பிடியிலிருந்தேன். தற்போது கோனாபட்டின் மகிமையால் விடுபட்டேன்.

திருமகளில் அரசியல் விவகாரங்கட்கு இடம் தரலாமா? கூடாதா?


இங்ஙனம்

தங்கள் அன்புப் பதிலை ஆவலுடன்

விழையும் கண்ணதாசன்

**(ஏ.எல்.எஸ். முத்தய்யன்)**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.82, 83.*



"DRAVIDA NADU"

Editor:
C. N. ANNADURAI

HODGSONPET
CONJEEVERAM -

31-3-46

- தனிப்படப்படி.
- திராவிட நாடு இதழ் ஆசிரியர் சி.என். அண்ணாதுரை மடற்கட்டில் எழுதப் பெற்ற இக்கடிதம் அண்ணாவின் கையெழுத்தில் அமையாததோடு இறுதியில் இடம்பெற்றுள்ள கையொப்பம் அண்ணாவினுடையதாகத் தெரியவில்லை.

# கடிதம் - 2.34

"DRAVIDA NADU"

Editor: HODGSONPET
C.N. ANNADURAI CONJEEVERAM

31.3.46

மதிப்பிற்குரிய கவிஞரவர்கட்கு,

வணக்கம்.

தங்களுடைய நிதி வசூல் சம்பந்தமாக இதுவரை இங்கு வந்துள்ள தொகையைத் தனியாக ஒரு வங்கியில் போட்டு வைத்திருக்கிறோம். தோழர் கிருஷ்ணராஜ் ரெட்டியார் அவர்கள் மூலம் வசூலான தொகை இன்னும் இங்கு அனுப்பப்படவில்லை. தாங்கள் அவருக்கு ஒரு கடிதம் எழுதி, அவரிடமுள்ள தொகையை இங்கு அனுப்பிவைக்கும்படி செய்யவும். வசூல் வேலையை விரைவாகச் செய்வது நல்லது என்று நினைக்கிறோம். இதுவரை இங்கு வைத்துள்ள தொகை 884/- தான். மற்றத்தொகைகள் வசூல் செய்தவர்களிடமே இருக்கிறது. மற்றவை தங்கள் கடிதம் பார்த்து.

அன்பன்
**ANNA**

## கடிதம் - 2.35

தி மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

சேலம்
17.5.46

மானேஜிங் ஏஜென்ட்ஸ்,
சுந்தரம் அண்ட் கோ

உயர்திரு பாரதிதாசன் அவர்கட்கு,

இப்பவும் சுலோசனாவில் இன்னும் சில விஷயங்கள் சேர்த்து அமைக்க வேண்டியிருப்பதால், தாங்கள் உடனே புறப்பட்டுச் சேலம் வந்து சேரவும்.

யாவும் நலமே,
**டி.ஆர். சுந்தரம்**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.84.*

# கடிதம் - 2.36

புலவர்
மா. இராசமாணிக்கனார், எம்.ஓ.எல்., எல்.டி.,
விவேகானந்தர் கல்லூரி,
சென்னை.

அன்புள்ள அண்ணா அவர்கட்கு வணக்கம்.

நான் எழுதி வெளியிட இருக்கும் ''தாமரை வாசகம்''* என்னும் மூன்று நூல்களில் (முதல் பாரம், இரண்டாம் பாரம், மூன்றாம் பாரம் பாட நூல்களில்) கீழ்வரும் தங்கள் பாக்களைச் சேர்க்க விரும்புகிறேன். நான் தங்களைச் சென்னைக் கோர்ட்டுக்கு எதிரில் நேரிற்கண்டு இது பற்றிப் பேசினேன். ''நீங்கள் வேண்டுவன எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு கடிதம் எழுதுங்கள் அனுமதி தருகிறேன்'' என்று கூறி அருளினீர்கள். அதன்படி இக்கடிதம் எழுதுகிறேன்.

..................................

..................................

தங்கள் நல்வாழ்வை விரும்பும்,
தமிழன்
**மா. இராசமாணிக்கம் பிள்ளை**

- *பின்னாளில் பெரும் பேராசிரியராகத் திகழ்ந்த டாக்டர் மா. இராசமாணிக்கனார் வேண்டுகோளுக்கிணங்க பாவேந்தர் தம் பாடல்களை எடுத்தாள இசைவு வழங்கினார்.*
- *மடல் முழுமையாக இடம் பெறவில்லை.*
- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 115.*

* *சென்னை விவேகானந்தர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் எழுதப் பெற்றது. நூற்றாண்டுமாணிக்கம் ப.23, மு.ப. 2007.*
*1948... மா. இராசமாணிக்கனார் (சாகித்ய அகாதமி) ப. 99, மு.ப. 2006.*

# கடிதம் - 2.37

புதுவை
9.10.48

கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு,

வணக்கம்.

எனக்குத் திராவிட கழகத்தின் போக்குகள் பலவற்றின் மீது வேற்றுமை மனப்பான்மை இருந்தாலும் உங்களைப் பொறுத்த வரையிலும் உங்கள் கவிதைகளைப் பொறுத்த வரையிலும் எனக்குத் தனிப்பட்ட அபிப்பிராயமுண்டு. நான் மற்றவர்களைப் போல உங்களுடைய கவிதைகள் திராவிட மக்களைத் தட்டி எழுப்பக் கூடியனவாகவும் திராவிட நாட்டுக்கே நன்மை அளிக்கக் கூடியனவாகவும் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், உங்கள் கவிதைகளில் பல இனவேறுபாடற்று இவ்விந்திய மக்களையே மாற்றி அமைக்கக் கூடியனவாகவும் யாதொரு வேறுபாடும் அற்று இந்தியர்கள் யாவரும் தங்களைத் திருத்திக் கொள்ளக்கூடிய உயர்ந்த கருத்துக்களை உடையதாகவும் இருக்கிறது. ஆதலால் நீங்கள் எந்தக் கட்சியிலாவது அங்கம் வகித்து வந்த போதிலும் நான் உங்களுக்குக் கட்சியின் மூலமாக எல்லை காட்ட முடியாது.

நீங்கள் ஒரு கவிஞர். கவிஞனின் வாக்கு உலகத்துக்கே பயன்பட வேண்டும். கவிஞனின் வாக்கு பொய்யாகக் கூடாது.

தற்போது பிரஞ்சிந்தியாவில் உள்ள மக்கள் அந்த பிரஞ்சி என்ற விலங்கிலிருந்து விடுபட்டுத் தாயகத்தோடும் தன் உற்றார் உறவினரோடும் சரிசமமாகத் துன்பத்திலும் இன்பத்திலும் பங்கெடுத்துக்கொள்ள விழைகின்றார்கள். இந்தச் சமயத்தில் அறிவாளிகள் எல்லோரும் குழுமி வந்து தங்கள் அறிவைச்

செலுத்தி சுதந்திர வேட்கை கொண்ட மக்களுக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைய வேண்டும். செல்வர்கள் எல்லாம் தன் செல்வங்களைச் சுதந்திர போராட்டத்திற்கு மனமுவந்து இருகைகளாலும் வாரிக் கொடுக்க வேண்டும். கவிஞராகிய நீங்கள் கவிதைகள் மூலமாகவும், நேரிலேயும் சென்று பொதுமக்களை ஊக்குவிக்க வேண்டும்.

நமக்குள் ஆயிரம் வேற்றுமைகள் இருந்த போதிலும் நம்மை அடிமைப்படுத்தும் பொது விரோதியை விரட்டி அடிக்க நாம் ஒன்றுபட வேண்டாமா? அப்போதுங்கூட நாம் நமக்குள் இருக்கும் சில்லரை நியாயங்களைப் பேசிக் கொண்டிருக்க வேண்டுமா?

இந்தியை எதிர்ப்பவர்களைச் சிறையிலடைப்பதால் நாம் இந்திய யூனியனில் சேரமாட்டோம் என்ற கருத்துப்பட எழுதுகின்றது குரல். அங்கு இந்தியை எதிர்ப்பதற்காகவாவது உரிமையும் உணர்ச்சியும் இருக்கிறது. ஆதலால் தமிழின் மகிமையை அறிவதற்காகவாவது இங்கு ஆட்சி செய்யும் பிரஞ்சி அரசாங்கம் கப்பல் ஏற வேண்டாமா?

நீங்கள் எங்களுடன் சேர்ந்து சுதந்தரப் போராட்டத்தை நடத்த வேண்டும். அது எங்களுடைய ஆசை. தமிழ் அன்னையின் ஆசை. ஆதலால்தான் இவ்வளவு காலமாக இனிய கருத்துக்களை வெளியிட உதவிய அச்சகப் பொறி இப்போது குயில் கொண்டிருக்கும் கருத்துக்கு மாறுபட, மாற்றத்தைத் தெரிவிக்கத் தன் உதவியை மறுத்துவிட்டது.

இப்படிக்கு,

**ஷண்முகம்.**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.85.*

# கடிதம் - 2.38

சென்னை
30.11.48

பேரன்புமிக்க திரு. ''பாரதிதாசன்'' அவர்களுக்கு

இளங்கோ வணக்கம்.

நான் இரண்டாண்டுகளுக்கு முன்பு தங்களது "இசையமுது'' என்னும் கவிதைகள் நிறைந்த நூலைப் பன்முறை படித்து இன்புற்றேன். அவைகளிலே ஒன்றான ''பெற்றோர் ஆவல்'' என்ற தலைப்பில் உள்ள கவிதையில், என்பதில் "இறைவனாரின் திருக்குறளிலே ஓர் சொல் இயம்பிக் காட்டமாட்டாயா'' என்ற அடிகள் நான் முன்பு படிக்கையில் "இறைவனாரின் அகப் பொருளிலே ஓர் சொல் இயம்பிக் காட்டமாட்டாயா'' என்று இருந்ததாக நன்கு நினைவு இருக்கிறது. இதைப் பற்றி எனது மாணவ நண்பர்களும் என்னைப் போலவே கூறுகின்றனர். ஆனால் புதுவையிலுள்ள ''பாரத சக்திநிலையத்தாருடைய வெளியீட்டில் "இறைவனாரின் திருக்குறளிலே'' என்று அச்சிடப்பட்டுள்ளது. திரு. டி.கே. ஷண்முகம் அவர்கள் நடத்தும் நாடகங்களிலும் ''இறைவனாரின் திருக்குறளிலே'' என்றே பாடுகிறார்கள். மாணவர்களாகிய நாங்கள் ''இறையனாரின் அகப்பொருளிலே'' என்றுதான் தாங்கள் பாடியுள்ளதாகவும் அதைச் சில தேசீயப் பதிப்பகங்கள் மாற்றி விட்டதாகவும் முடிவு செய்தோம். எங்கள் தீர்ப்புச் சரியா தவறா என அருள் கூர்ந்து அறிவிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

தங்களன்புள்ள,
**இளங்கோ.**

முகவரி : இளங்கோவன்*
160, பச்சையப்பன் ஹாஸ்டல்
சேத்துப்பட்டு, மதராஸ் 10.

* *கடிதம் எழுதியவரின் பெயரிலும் ஒப்பத்திலும் 'இளங்கோ' என்று உள்ளது. ஆனால், முகவரியில் 'இளங்கோவன்' என்று குறிக்கப்பட்டுள்ளது.*

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.89.*

# கடிதம் - 2.39

பீளமேடு P.o
கோயம்புத்தூர்.

8.12.1948.

ஆர். இரத்தினவேலு,
இசையாசிரியர்,
சர்வஜன உயர்நிலைப்பள்ளி,

அன்புள்ள அண்ணா அவர்களுக்கு

வணக்கம்.

இப்பவும் அரசியலார் புதிய பாடத்தின்படி இசை வகுப்பிற்கு இசைக்கதிர் என்று மூன்று நூல்களைத் தொகுத் திருக்கிறேன். அதாவது இவை முறையே 6ஆம் வகுப்பு, 7ஆம் வகுப்பு, 8ஆம் வகுப்பிற்குரியன. இதில் ''தமிழுக்கும் அமுதென்று பேர்'' என்ற பாடலை 6ஆம் வகுப்பிற்கு உரிய இசைக்கதிர் முதற் புத்தகத்திலும், ''தேனோடும் தமிழ் மாநாடே'', ''தமிழே தமிழரின் செல்வம்'' என்ற இரு பாடல்களையும் இசைக்கதிர் இரண்டாம் புத்தகத்திலும், ''வெண்ணிலாவும் வானும் போல'' என்ற பாடலை இசைக்கதிரில் மூன்றாம் புத்தகத்திலும் பதிப்பித்துக்கொள்ளத் தங்களின் அன்பான அனுமதியைக் கொடுக்க வேணுமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள
**ஆர். இரத்தினவேல்.***

* *கடிதம் எழுதியவரின் பெயர் ஆர். இரத்தினவேலு என்றும் ஒப்பத்தில் ஆர். இரத்தினவேல் என்றும் உள்ளது.*

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.91.*

# கடிதம் - 2.40

எஸ்.வி.ஒ. இன்ஸ்டிட்யூட்
திருப்பதி

தேதி : 9.12.1948

தி.பொ. பழநியப்ப பிள்ளை, பி.ஓ.எல்.
தமிழ் விரிவுரையாளர்,

அன்புடையீர்!

..........................................

..........................................

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினின்று நீங்கி இப்போது திருப்பதியில் திரு வெங்கடேசுவரன் கீழைக் கலையாராய்ச்சிக் கழகத்தில் பணியாற்றி வருகின்றேன். தெலுங்கர் தொகை மிக்க இவ்வூரில் பெரும்பாலும் தமிழ் செய்திகள் உடனாகத் தெரிய இடனில்லை. சென்ற கோடை விடுமுறையில் ஒரு நண்பர் நீங்கள் பாடி வெளியிட்ட தமிழியக்கச் சுவடியை என் பார்வைக்குக் கொடுத்தார். படித்து மெய்ம்மையாகத் தமிழ்த் திறத்தில் ஊக்கங் கிளர்ந்தெழுந்த எழுச்சியும் தகுதியும் கண்டு பெருமகிழ்வு கொண்டேன். ஆனாலும் ஒரு பிழை ஒரு பாட்டினிற் கண்டுள்ளந் திகைத்தேன்.

தமிழியக்கம்-கஉ-ம் பகுதி-கோயிலார்-பக்கம் 24-பாடல் 59 வது.

''சொற்கோவின் நற்போற்றித் திருவகவல் செந்தமிழி லிருக்கும் போது'' - இக்கவியின் கருத்துப் போற்றற்பாலதே. சொற்கோ-திருநாவுக்கரசர். அவர் போற்றித் திருவகவல் பாடியருளவில்லை. இப்போற்றித் திருவகவல் பாடியருளியோர் மாணிக்கவாசகர். இதனில் நீங்கள் மயங்கிப் பாடிவிட்டீர்கள்.

திருநாவுக்கரசர் பாடிய தாண்டகங்களுள் ஆறாந்திருமுறையில் உள்ள திருவாரூர்ப் போற்றித் திருத்தாண்டகம்தான் ''கற்றவர்களுண்ணுங்கனியே'' போற்றி, என்று தொடங்கித் திருமூலட்டானனே போற்றி மொழிகளைக் கொண்டுள்ளமையால் வேதநெறிச் சகத்திர நாமத்திற்கெதிராகத் தமிழ்ச் சைவநெறி அட்டோத்தரசதச் சிவார்ச்சனைப் பதிகம் எனக் கொண்டாடப் படுவதாகும். மணிவாசகர் பாடிய போற்றித் திருஅகவலில் இத்தொகையுமில்லை - சிவார்ச்சனைப் பதிகமாகக் கொள்ளுவது மில்லை. ஆதலால் அவ்வடியை ''சொற்கோவின் நற்போற்றித் தாண்டகம் நஞ்செந்தமிழில் துவங்கும் போது'' எனத் திருத்துதல் வேண்டுமென உங்களுக்கு நண்பு முறையிற் கூறுகின்றேன்.

இங்ஙனம் அன்பன்,

**தி.பொ. பழனியப்பப்பிள்ளை**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.93.*

# கடிதம் - 2.41

பீளமேடு P.o
கோயம்புத்தூர்

14.12.1948.

ஆர். இரத்தினவேலு
இசை ஆசிரியர்
சர்வஜன உயர்நிலைப்பள்ளி.

அன்புள்ள அண்ணா அவர்களுக்கு,

தாங்கள் எழுதியவாறு இசைக்கதிர் முதற் புத்தகத்திலும், இரண்டாவது புத்தகத்திலும் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களின் அட்டவணையை அனுப்பி இருக்கிறேன். இதில் இரண்டிலும் மூன்று பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது புத்தகம் இன்னும் சரிவர முடியவில்லை. முடிந்ததும் அனுப்புகிறேன். இம்மூன்று பாடல்களையும் இவ்விரு நூல்களில் பதிப்பித்துக் கொள்ள அனுமதி கொடுக்க வேணுமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுடைய உயர்வையும் சிறப்பையும் எதிர்நோக்கிப் பெருமை கொண்டுதான் வந்திருக்கிறேனே அன்றித் தங்களை இழிவுபடுத்தும் எண்ணத்தை இதுவரை எண்ணியதும் இல்லை. எண்ணப் போவதும் இல்லை. என்னுடைய இசையரங்கில் தங்களுடைய பாடல்களுக்குத் தனி இடம் வகுத்தும், அதிலும் அதிக பெருமையைத் தங்களுடைய பாடல்களினால் பெற்றும் வருகிறேன்.

அன்புள்ள,
**R. இரத்தினவேல்.**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 95.*

# கடிதம் - 2.42

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

21.12.48.

பண்டித வித்வான்
எல்.பி.கேஆர். இராமநாதன் செட்டியார்
முதுநிலைத் தமிழாசிரியர்.

அன்புள்ள அய்யா,

தங்களால் இயற்றப்பெற்ற கீழ்க்காணும் 3 பாடல்கள் IV, V பாரங்கட்குப் பாடமாக நான் தொகுக்கும் தமிழிலக்கிய மாலையிற் சேர்த்து வெளியிடத் தயவு செய்து அனுமதிதர வேண்டுகிறேன்.

நூல் அச்சிடும் நிலையில் இருப்பதால், தங்கள் அன்பான பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

தங்கள்

லெ.ப.கரு. இராமநாதன்.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.96.*

# கடிதம் - 2.43

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

30.12.48

பண்டித வித்வான்
எல்.பி.கேஆர். இராமநாதன் செட்டியார்
தமிழ்ப் பேராசிரியர்

அன்புள்ள ஐயா,

நான் வெளியிடங்கட்குச் சென்றிருந்தமையால் தங்கள் கடிதத்தை இன்றுதான் பார்க்க நேர்ந்தது.

IV, V பாரங்கட்கு என்னால் தொகுக்கப்பெறும் தமிழ் இலக்கிய மாலை ஒவ்வொன்றிலும் கடவுள் வாழ்த்து, அறிவுரை, தொடர்நிலைச் செய்யுள், சிறு செய்யுள், புனைந்துரை, பல்சுவை என்னும் ஆறு பகுதிகள் உள்ளன. IV பாரத்துக்குரிய தமிழ் இலக்கிய மாலையின் 6 பகுதிகளுள் சிறு செய்யுள் என்னும் பகுதியில் பிள்ளைப் பெருமாளையங்கார், குமரகுருபரர், சுப்பிரமணிய பாரதியார், வெ.ப. சுப்பிரமணிய முதலியார், நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் பாடல்களோடு தங்கள் பாடல் ஒன்றும், V பாரத்திற்குரிய தமிழ் இலக்கிய மாலையில் 6 பகுதிகளுள் புனைந்துரை என்னும் பகுதியில் நக்கீரனார் (திருமுருகாற்றுப்படை), கடியலூர் உருத்திரங்கண்ணனார் (பட்டினப்பாலை), பரிதிமாற்கலைஞன், ந. பலராமையர் ஆகியோர் பாடல் இரண்டும் சேர்க்கப்பெற்றுள்ளன. இத்தொகுப்புகளில் சேர்க்கப்பெறும் பாடல்களையெல்லாம் அவை வெளியான காலமுறை பற்றியே சேர்த்திருக்கின்றேன். அம்முறையில் தங்கள் பாடல்கள் இவ்விரண்டு பகுதிகளிலும் இறுதியில் அமைகின்றன.

தங்கள்

**லெ.ப.கரு. இராமநாதன்**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.97.*

# கடிதம் - 2.44

23.3.50

புலவர் குழந்தை
வேளாள நிலையம்
பவானி (வழி), ஈரோடு.

அன்புடையீர்!

வணக்கம்.

கோவை ஜி.டி. நாயுடு பங்களாவில் நடந்த பாரதி விழா இரண்டாவது நாள், தாங்கள், பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது, தாங்களும் பாரதியாரும் வ.வே.சு. ஐயரும் ஒரு ஆதிதிராவிடத் தோழருடன் உடனுண்டதாகவும் அது கண்ட வ.வே.சு. அய்யர் ஏதோ கேட்டதாலும், பாரதியார் அதற்குத் தீண்டாமைக் கொடுமையைப் பற்றி, அது ஒழிய வேண்டியது பற்றி விளக்கம் கூறியதாகவும் தாங்கள் கூறியதாகக் கூறினர். என்ன கூறினார் ஐயர்? அதற்குப் பாரதியார் கூறினது என்ன? உடனிருந்து உண்ட பழந்தமிழன் பெயர் தெரியுமானால் அதுவும் அன்பு கூர்ந்து விளக்கமாக எழுதி அனுப்ப வேண்டுகிறேன். அவசியம் இச்செய்தி வேண்டியிருக்கிறது. கட்டாயம் புறக்கணிக்காமல் இரண்டு மூன்று நாட்களில் எழுதியனுப்புதல் வேண்டும். முன்னொரு கடிதம் எழுதினேன். தங்களுக்கும் பாரதியாருக்கும் உள்ள தொடர்பையும் குறித்தனுப்புதல் வேண்டும்.

கட்டாயம் எழுதவும்.

அன்புடன்,
அ.மு. குழந்தை.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.99.*

# கடிதம் - 2.45

நெல்லை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக
முதலாவது மாநாடு

கோவில்பட்டி
தேதி : 15.8.50

1950 ஆகஸ்ட் 26, 27

| | |
|---|---|
| வரவேற்புக்குழுத் தலைவர் | : ஈ.வே.அ. வள்ளிமுத்து. |
| பொதுச் செயலாளர் | : டபிள்யு.டி. துரைசாமி. |
| துணைச் செயலாளர்கள் | : எஸ். நடராஜன், கலிங்கன். |
| பொருளாளர் | : எஸ்.பி. துரைசாமி. |
| தொண்டர் படைத் தலைவர் | : பி. பாலகிருட்டிணன். |
| விளம்பர உறுப்பினர் | : ஆ. திராவிடமணி. |

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்

அன்புடையீர்,

வணக்கம்.

25, 26, 27 தேதிகளில் கலந்துகொள்ள முடியாது எனத் தாங்கள் விடுத்த அறிவிப்பு உள்ளபடியே எங்களைத் திகிலடையச் செய்கிறது.

முதல் அறிவிப்பில் தங்கள் சம்மதம் கேளாததால் தங்கள் பெயரைப் போடாமலிருந்து, தங்களை நேரில் கண்டு சம்மதம் கேட்ட பின்னரே, மாநாடு சுவரொட்டி விளம்பரங்களிலும் துண்டுப் பிரசுரங்களிலும் தங்கள் பெயரைப் போட்டதுடன், பஞ்சாயத்துப் போர்டிலிருந்தும் தங்களுக்கு வரவேற்பு அளிக்க வேண்டுமென ஒரு மனதாகத் தீர்மானம் செய்த பின்னரும் தாங்கள் வரமுடியவில்லை என எழுதினால் நாங்கள் வருந்தாமல் என்ன செய்ய முடியும்?

மாநாடு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளாமற் போனாலும் பஞ்சாயத்துப் போர்டு வரவேற்பை வாங்கிக் கொண்டு உடனே போய்ச் சேர வேண்டுமானாலும் போகலாம். இது நிலைமை பற்றி உடனடியாகச் சம்மதம் தெரிவிப்பீர்களென நம்புகிறேன். ஏற்கெனவே மாநாட்டுக்கு வருவீர்கள் என விளம்பரமாகியிருந்தாலும், கவிஞர் என்ற முறையில் தங்களுக்கு வரவேற்பளிக்கத் தீர்மானித்திருக்கும் போர்டு அழைப்பை நிராகரிக்க மாட்டீர்களென நம்புகிறேன். அடுத்தபடியாகச் சம்மதம் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன். மற்றவை தங்கள் கடிதம் கண்டு. வணக்கம்.

தங்கள் அன்புள்ள

**ஈ.வே.அ. வள்ளிமுத்து**

15.8.50

நகரசபைத் தலைவர்.

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 100.*

# கடிதம் - 2.46

நா. இராசவேல்
9, குருவப்ப செட்டி தோட்டம் சந்து
சென்னை - 21
2.1.52 இரவு.

சர்க்குலேஷன் மேனேஜர்,
'பொன்னி' - சென்னை - 21.

கவியரசர் அவர்கட்குப் பணிவுமிக்க வணக்கம்.

தம்பியும், சரசுவதியும் நலம்.

......................................

......................................

'சூழ்நிலை'யைத் துவக்குவதாயின் எவ்வகை வசதியும் இல்லை. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யத்தக்கவாறு அலுவலில் ஓய்வில்லை. குடியிருக்கும் தண்டையார் பேட்டையும் அண்டையில் இல்லை. வேலையில் இருக்கும் போதே, தொடர்ந்து வாரமொன்று தங்க நேர்ந்தால் தொல்லை யாகக் கருதிக் குறிப்பால் உணர்த்தும் மாமனார் வீட்டார், வேலையிழந்தால் வரவேற்க மாட்டார்கள் என்பதே உறுதியைத் தளர்த்துகிறது. எது எப்படியாயினும், ஓரளவு பொருள் வசதி யிருந்தால் சமாளித்துக் கொண்டு 'சூழ்நிலை'யைத் துவங்கலாம். அல்லது, மாடர்ன் தியேட்டரில் வாய்ப்பிருந்தால், ஒரு துணை எழுத்தாளனாகத் தங்கள் சிபாரிசில் அமர்ந்தாக வேண்டும்.

இந்நிலையில், சென்னையை விட்டுத் தூரத்தில் கொஞ்ச காலத்திற்கேனும் இருக்க முடிகின்ற அமைதியும் கிடைக்கிறது. ஆகவே, 'சூழ்நிலை'யைத் துவக்கவோ அல்லது சேலத்தில் இருக்கவோ - ஆன முடிவுக்கு வரத் தங்கள் ஆணையை முன்கூட்டியே எதிர்பார்த்துக் காத்துள்ளேன்; வழிசொல்ல வேண்டுகிறேன்.

பணிவுள்ள,

**நா. இராசவேல்**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.102.*

## கடிதம் - 2.47

அன்புத் தந்தைக்கு!

வணக்கம்.

நேற்று வருவதாகச் சென்றவர் எவரும் வரவில்லை. கடைசிவரை காத்திருந்து உங்கட்கு எழுதவும் முடியாது போயிற்று.

ஞாயிறன்று வருவார்கள். நடேச முதலியார், முத்தியாலுப் பேட்டையில்தான் தங்கியிருக்கிறார். 20.06.53 ஞாயிறு காலை - திருமண நிகழ்ச்சி இங்கே! வேறு புதுமையில்லை!

**சு. மன்னர்மன்னன்**

17.6.53

அத்தையார்க்கு என் வணக்கம்!

சு. மன்னர் மன்னன்
பாரதிதாசன் பதிப்பகம்
புதுச்சேரி.

Post

Bharathidasan
C/o. Danushkodiraja
37, Naikar Street
SELLUR
MATHURAI

# கடிதம் - 2.48

ராபர்ட்சன் பேட்

கோலார் தங்கவயல்

19.12.53

ஏ.ஆர். சபாபதி

திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்.

அன்பின் பெரியார் அவர்களுக்கு

வணக்கம். நலம்.

வெளியூர் போயிருந்த நான் இன்றுதான் திரும்பினேன்.

தங்கள் அன்பின் அஞ்சலுக்கு நன்றி. என் நம்பிக்கை வீண் போகவில்லை. விரைவில் சென்னைக்கு வருவேன். உடல்நலக் குறைவால் இன்றே புறப்பட இயலவில்லை. மன்னியுங்கள்.

பெருஞ் செல்வர் நம்வசம் இல்லை. நான் முன்னர் குறித்தபடி ஸ்டுடியோவும் பிலிமும் ஓர் ஒப்பந்த மூலம் செலவு போகும். வசனம், பாடல்கள் தங்கள் பொறுப்பு. கதை, "டைரக்ஷன்" இவை என் பொறுப்பு. சில்லரை நடிகர்கள் நம்மிடமுளர். பெரிய நடிகர் மூவர், நடிகையர் மூவர் இவர்களுக்கு இரு ஜில்லாக்களைத் தந்து விடும் முறையில் ஒப்பந்தம் செய்து கொள்ள முயன்று வருகிறேனெனத் தெரிவித்தேன். அதிலும் அதிகக் கஷ்டமில்லையென்றே தோன்றுகிறது. இத்தகைய பெரிய செலவினங்கள் போக மீதியுள்ளவை சிறிய செலவினங்கள்.

இவற்றிற்குப் பணவுதவி செய்யப்பட விநியோகத் துறையிலுள்ள இரண்டொருவர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். மேலே கண்ட ஒப்பந்தங்களை முடித்துக் கொண்டோமாயின்,

இவர்கள் தரும் பணத்தில் படத்தை முடித்துவிட முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு அப்போதுதான் ஏற்படும்.

புதன்கிழமைக்கு மேல் நான் வருகிறேன். தாங்கள் விரும்பிய அனைத்தையும் கொண்டு வருகிறேன். தாங்கள் அதுபோது சென்னையில்தான் இருப்பீர்கள் என்பதை உறுதிப் படுத்திக்கொள்ளத் தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன். என் முகவரியில் அஞ்சல் உறையொன்றும் இத்துடன் வருகிறது.

இங்ஙனம்,
அன்பன்
**அ. ரத்தின சபாபதி.**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 103.*

# கடிதம் - 2.49

24.6.55

வித்வான் என். சுப்புரெட்டியார்
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி.
அழகப்பா கல்லூரி.

அன்புருவாய கவிஞருக்கு,

வணக்கம் பல. தங்கள் அருமை மகனின் திருமண அழைப்பு வந்தது. மெத்த மகிழ்ச்சி. மணமக்கள் மனமொத்து வள்ளுவன் வகுத்த வாழ்க்கை நெறியில் ஒழுகி வாழ்க்கையின் பேறுகளனைத்தினையும் பெறவேண்டுமென அவனடிகளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

வணக்கம்.

அன்பன்,
**என். சுப்பு ரெட்டியார்.**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 106.*

# கடிதம் - 2.50

திராவிட முன்னேற்றக் கழக
இரண்டாவது மாநில மாநாடு

திருச்சிராப்பள்ளி

தெப்பக்குளம் 13.4.56

வரவேற்புக்குழு

தலைவர் : A.P. தர்மலிங்கம்
செயலாளர்கள் : M.S. மணி, S. முத்து
பொருளாளர் : C.N. அண்ணாதுரை, M.A.,
தொண்டர் படைத்தலைவர் : I.M. ஷரிப்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு

பேரன்புடையீர்!

வணக்கம். நலம். நலமறிய அவா.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மேத்திங்கள் 17, 18, 19, 20 ஆகிய நாட்களில் திருச்சியில், பந்தயத்திடலில் (ரேஸ் கோர்ஸில்) நடத்த முடிவு செய்திருக்கிறோம். மாநாட்டில், இலக்கியத் துறையில் அரும்பணி ஆற்றிவரும் தங்களுக்குத், "தி.மு.க. விருது" என்ற பெயரில் ஒரு கேடயத்தையோ அல்லது வேறு ஒரு பொருத்தமான பொருளையோ அன்பின் பரிசாக வழங்குவதன் மூலம், தி.மு. கழகம் தன்னுடைய பாராட்டுதலையும், நன்றி யறிதலையும் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் விழைந்து நிற்கிறது. எங்களது பணிவன்பான வேண்டுகோளைத்

தாங்கள் ஏற்று, மாநாட்டிற்கு வந்து, விருதினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். விருது அளிக்கும் நிகழ்ச்சி 17.5.56 வியாழனன்று மாலை நடைபெறும். தோழர் என். சாம்பு அவர்கள் இது பற்றித் தங்களிடம் நேரில் கூறி வந்திருப்பது நினைவிருக்கும் என்று கருதுகிறேன்.

தங்கள் இசைவான மடலை உடன் எதிர்பார்த்து நிற்கிறேன்!

நன்றி!

அன்பன்,

**இரா. நெடுஞ்செழியன்,**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 107.*

## கடிதம் - 2.51

பாரதி இலக்கியக் கழகம், மதுரை.

தேதி : 29.10.56

எஸ். பாலசுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்.,
செயலாளர்
பாரதி இலக்கியக் கழகம்
மதுரை

கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு,
வணக்கம்.

எங்கள் கழகத்தின் சார்பில் பாரதியார் பிறந்த நாள் விழாவை டிசம்பர் மாதம் 9-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மதுரையில் தங்கள் தலைமையில் நடத்துவதென்று முடிவு செய்திருக்கிறோம். பாரதியாரின் வாரிசான தாங்கள்தான் பாரதியாரின் விழாவிற்குத் தலைமை தாங்கக் கடமைப்பட்டவர்கள். தங்கள் கடமையையும் உரிமையையும் உணர்ந்து எங்கள் அழைப்பை ஏற்பீர்கள் என்று திடமாக நம்புகிறேன். தங்கள் பதிலைக் கீழ்க்கண்ட முகவரிக்கு* எழுதுமாறு வேண்டுகிறேன்.

தங்கள்
**எஸ். பாலசுப்பிரமணியன்**

* *மூலக்கடிதத்தில் முகவரி தரப்படவில்லை.*

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.109.*

# கடிதம் - 2.52

பாரதி இலக்கியக் கழகம், மதுரை

தேதி : 5.11.56

அன்பு வணக்கம்.

ஐயா அவர்களுக்கு, உங்களின் கடிதமும், ஒப்புதல் கடிதமும் பெற்றேன். நன்றி. இங்கு அனைவரும் நலம். அங்குள்ள நலத்திற்கு எழுதவும். விழா மிகவும் சிறப்புடன் நடக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறேன். தாங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே வந்துவிட வேண்டுகின்றேன்.

தங்கள்

**சோ. சாமிநாதன்.**

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.111.*

# கடிதம் - 2.53

திருச்சி 4.9.57

கவியரசர் அவர்கள் திருமுன்,

வணக்கம். கட்டளைப்படி 11.9.57ல் புதுவையில் இருப்பேன். இரவு விழுப்புரம் தூத்துக்குடி வண்டியில் ஏற்றிவிட வாக்களித்தமைக்கு நன்றி. கிருஷ்ணசாமி ஊரில் இல்லை. வந்த பிறகு அவர் வரக்கூடுமா என்பதை அறிவிப்பேன்.

தங்கள்

**திருலோக சீதாராம்.**

சிவாஜி - தமிழ் வார இதழ்
திருச்சி - 2.

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.110*

# கடிதம் - 2.54

13.10.58

பழனியப்பா பிரதர்ஸ் பப்ளிஷர்ஸ்
தெப்பக்குளம்
திருச்சி-2.

திரு. பாரதிதாசன் அவர்கள்.
புதுச்சேரி.

பேரன்புடையீர்!

நாங்கள் வெளியிட இருக்கும் எட்டாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில், தாங்கள் எழுதியுள்ள 'சோலை' என்னும் கவிதையை அமைக்கலாம் என்று எண்ணியிருக்கிறோம். அதற்குத் தாங்கள் இணங்குவீர்கள் என நம்புகிறோம்.

தங்கள் இணக்கத்தை எதிர்பார்க்கும்

அன்புள்ள

**மேனேஜர்**

• *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப.112.*

# கடிதம் - 2.55

Thiru Bharathi Dasan Avargal
95, Rue de Perumal Kovil,
Puduchcheri - Pondichery.

Dear Mahakavi,

I send enclosed herewith an issue of our Novy 'New Orient Monthly / Wherein you will find a few of my CZECH translations of your splendid poems together with a short note on your life and work.

May I ask you to kindly arrange for the despatch of your collected work to me? For me and my students of Tamil it is a "must" - your work is undoubtedly the peak of Tamil lyrical poetry in the first half of our century.

Yours very sincerely,
Dr. Kamil Zvejebil,
தமிழ் ஊழியன்

CESKOSLOVENSKAAKDEMIE VED
ORINENTALNI USTAV
LAZENSKA 4, PRAHAI - MALA STRANA
C tel 663 - 9. 663 - 96.

- *இக்கடிதம் 4.3.62 முன் எழுதப்பட்டிருக்கலாம்.*
- *கவிஞர் முருகு. சுந்தரம், பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம், ப. 443-444.*

# கடிதம் - 2.56

தமிழாயி துணை

பாரதிதாசனுக்கு!

அன்பு! ஆசி! நலம்!

பாரதி விழாவில் இந்த ஆண்டு நீ தலைமை வகிப்பதாக இன்று 10.9.62 தினமணியில் கண்டேன். மகிழ்ச்சி! நான்கு நாட்கள் முன்னாடியே தெரிந்திருந்தால் பாரதியையும் உன்னையும் நன்கு தெரிந்த நானும் வந்து கலந்திருப்பேன். இப்போதாவது பாரதியைக் கண்டவர்களைக் கண்டுபிடித்து விழா நடத்துகிறார்களே அதற்கு மகிழ்ச்சி!

அன்பு
சோதி வளையாபதி அடிகள்,*
சுவர்ணமணி வயித்யாலயம்,
சிவகங்கை

10.9.62

* *பாரதி வாழ்ந்த காலத்தில் தேசிய இயக்கத்தில் தீவிரவாதியாகச் செயல்பட்டவர் வளையாபதி அடிகள். இவர் தென் தமிழ்நாட்டுடன் நெருங்கிய நட்புடையவர், பின்னாளில் துறவு நெறியைத் தழுவியும் மருத்துவத் தொழில் செய்தும் சமூகத்துக்குத் தொண்டு செய்தார்.*

- *கோ. பாரதி, பாவேந்தர் பெட்டகம், ப. 114.*